செய்யப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி இப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன் இந்த ஆண்டில்கூட இந்த இரண்டு கல்லூரிகளில் பகுதி நேர பொறியியல் பட்டப்படிப்புக்கு வசதிகள் செய்யப்படும்.

வருவாய்த் துறை நெறிக்குழுவின் ஆணைகள்

* 226 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போதுள்ள ரெவின்யூ ஸ்டேன்டிங் ஆர்டரை மாற்றி, திருத்தி அமைக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். சங்கரய்யா: இந்த ரெவின்யூ போர்டு உத்தரவுகள் காலத்திற்கேற்றவாறு திருத்தியமைக்கப்படவேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக, இப்பொழுது இருக்கக்கூடிய புதிய அரசாங்கம் அவைகளில் காலாவதியான முறையில் இருக்கக்கூடிய அம்சங்களை நீக்கிவிட்டு, இன்றைக்கு ஏற்ற முறையில் அவைகளை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக அவ்வப்பொழுது சில திருத்தங்கள் தேவைப்படும்பொழுது திருத்தங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், இப்பொழுது நிலவரி நீக்கம் சம்பந்தமாக பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், அவைகளைத் திருத்தலாமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas most of the Board's Standing Orders are outdated and obsolete and they serve no utilitarian purpose as far as the people are concerned, and whereas even in the matter of assignment of lands, there are more rules to refuse assignment to the landless people rather than to assign these lands to the deserving people, and whereas most of the rules are discredited and even the Members of the Boards are not in favour of them, will the Government reconsider the possibility of constituting a departmental committee with experts in this line and then formulate a new set of rules which would be useful to the people of our State?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I have already answered this question. Many of the rules which had been framed in 1878 and reprinted in 1958 are outmoded and in view of the abolition of the land tax, it has become essential that there must be re-examination and the Government will look into it.